www.Padasalai.Net www.TrbTnpsc.com

**10 - ஆம் வகுப்பு**

# அரையாண்டுத் தேர்வு - 2023-24

Time : 1.30 Hrs

## அறிவியல்

மொத்த மதிப்பெண்கள் : 100

**I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. வாயு ஊடகத்தில் ஒலியின் திசைவேகம் 330 மீவி. வெப்பநிலை மாறிலியாக இருக்கும் போது அதன் அழுத்தம் 4 மடங்கு உயர்த்தப்பட்டால் ஒலியின் திசைவேகம்
அ) 330 மீவி$^{-1}$ ஆ) 660 மீவி$^{-1}$ இ) [illegible] மீவி$^{-1}$ ஈ) 990 மீவி$^{-1}$
2. மனிதனால் உணரக்கூடிய செவியுணர் ஒலியின் அதிர்வெண்
அ) 50 KHz ஆ) 20 KHz இ) 15000 KHz ஈ) 10000 KHz
3. $1.25 \times 10^4$ Hz அதிர்வெண் உடைய ஒலியானது 344 மீவி$^{-1}$ வேகத்தில் பரவுகிறது எனில் அதன் அலைநீளம்?
அ) 27.52 மீ ஆ) 275.2 மீ இ) 0.02725 மீ ஈ) 2.752 மீ
4. ஒரு ஒலி அலையானது எதிரொலிக்கப்பட்டு மீண்டும் அதே ஊடகத்தில் பரவும் போது, கீழ்கண்டவற்றுள் எது மாற்றமடையும்?
அ) வேகம் ஆ) அதிர்வெண் இ) அலைநீளம் ஈ) ஏதுவுமில்லை
5. ஒரு கோளின் வளிமண்டலத்தில் ஒலியின் திசைவேகம் 500 மீவி எனில் எதிரொலி கேட்க ஒலி மூலத்திற்கும், எதிரொலிக்கும் பரப்பிற்கும் இடையே தேவையான குறைந்தபட்சத் தொலைவு என்ன?
அ) 17 மீ ஆ) 20 மீ இ) 25 மீ ஈ) 50 மீ
6. ஒரு துகளானது ஒரு மையப்புள்ளியிலிருந்து முன்னும், பின்னும் தொடர்ச்சியாக இயங்குவது ----- ஆகும்
அ) நெட்டலைகள் ஆ) குறுக்கலைகள் இ) மின்காந்த அலைகள் ஈ) ஒளி அலைகள்
7. ஒரு நெட்டலையின் ஆற்றலானது தெற்கிலிருந்து வடக்காகப் பரவுகிறது எனில், ஊடகத்தின் துகள்கள் --- லிருந்து ----- நோக்கி அதிர்வடைகிறது.
அ) மேற்கு, கிழக்கு ஆ) தெற்கு, வடக்கு இ) கிழக்கு, மேற்கு ஈ) வடக்கு, தெற்கு
8. அழுத்தம் மிகுந்த பகுதி என்பது ----------
அ) தளர்வுகள் ஆ) இறுக்கங்கள் இ) அதிர்வெண் ஈ) வேகம்
9. ஒலி அலைகள்
அ) நெட்டலைகள் ஆ) குறுக்கலைகள் இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றில் எதுவுமில்லை
10. குறைவான அதிர்வெண் உடைய ஒலி அலைகள்
அ) குற்றொலி அலைகள் ஆ) மீயொலி அலைகள் இ) செவியுணர் அலைகள் ஈ) ஏதுமில்லை
11. வௌவால் கேட்கக் கூடிய ஒலியின் திறன்
அ) <20,000 Hz ஆ) = 20,000 Hz இ) 2000 Hz ஈ) > 20,000 Hz
12. ஒளி அலைகள்
அ) குறுக்கலைகள் ஆ) பரவ ஊடகம் தேவை இ) அ மற்றும் ஆ ஈ) 340 மீவி$^{-1}$ திசைவேகம்
13. இரும்பில் ஒலியின் திசைவேகம்
அ) 5950 மீவி$^{-1}$ ஆ) 1950 மீவி$^{-1}$ இ) 9540 மீவி$^{-1}$ ஈ) 595 மீவி$^{-1}$
14. கதிரியக்கத்தின் அலகு
அ) ராண்ட்ஜன் ஆ) கியூரி இ) பெக்கொரல் ஈ) இவை அனைத்தும்
15. செயற்கை கதிரியக்கத்தினைக் கண்டறிந்தவர்
அ) பெக்கொரல் ஆ) ஐரின் கியூரி இ) ராண்ட்ஜன் ஈ) நீல்ஸ்போர்
16. புற்றுநோய் சிகிச்சையில் பயன்படுத்தப்படும் கதிரியக்க ஐசோடோப்பு
அ) ரேடியோ அயோடின் ஆ) ரேடியோ கார்பன் இ) ரேடியோ கோபால்ட் ஈ) ரேடியோ நிக்கல்
17. காமாக் கதிர்கள் அபாயகரமானது காரணம் அவை
அ) கண்கள் மற்றும் எலும்புகளைப் பாதிக்கும் ஆ) திசுக்களைப் பாதிக்கும்
இ) மரபியல் குறைபாடுகளை உண்டாக்கும் ஈ) அதிகமான வெப்பத்தை உருவாக்கும்
18. காமாக் கதிரியக்கத்திலிருந்து நம்மைப் பாதுகாக்க ---- உறைகள் பயன்படுகின்றன.
அ) காரீய ஆக்சைடு ஆ) இரும்பு இ) காரீயம் ஈ) அலுமினியம்
19. புரோட்டான் – புரோட்டான் தொடர்வினைக்கு எடுத்துக்காட்டு
அ) அணுக்கரு பிளவு ஆ) ஆல்பாச் சிதைவு இ) அணுக்கரு இணைவு ஈ) பீட்டாச் சிதைவு
20. காமினி அணுக்கரு உலை அமைந்துள்ள இடம்
அ) கல்பாக்கம் ஆ) கூடங்குளம் இ) மும்பை ஈ) இராஜஸ்தான்
21. இரத்த சோகையைக் குணப்படுத்தும் ஐசோடோப்பு ------
அ) பாஸ்பரஸ் –32 ஆ) கோபால்ட் – 60 இ) இரும்பு – 59 ஈ) சோடியம் 24
22. மனித உடலின் மேல்படுகின்ற கதிரியக்கத்தின் அளவினைக் கண்டறிய உதவுவது ------
அ) டோசிமீட்டர் ஆ) அம்மீட்டர் இ) வோல்ட் மீட்டர் ஈ) பாரோமீட்டர்
23. அணுகுண்டு வெடிப்பதன் தத்துவம்
அ) நியூக்ளியர் பிளவு ஆ) அணுக்கரு இணைவு இ) சிதறல் ஈ) வெப்பப்படுத்தல்
24. உட்கருவின் ஆற்றல்மட்டம் மட்டுமே மாற்றம் அடையும் சிதைவு
அ) பீட்டா சிதைவு ஆ) $\alpha$–சிதைவு இ) $\gamma$–சிதைவு ஈ) மூன்றும்
25. கதிரியக்கப் பொருட்களை இதனால் கையாள வேண்டும்
அ) தொலை கட்டுப்பாட்டு கருவி ஆ) இடுக்கிகள்
இ) அ மற்றும் ஆ ஈ) நீர்



CamScanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

26. ஒளிச்சிதைவு என்பது இதனால் நடைபெறும் சிதைவு வினையாகும்
அ) வெப்பம் ஆ) மின்னாற்றல் இ) ஒளி ஈ) எந்திர ஆற்றல்
27. $Na_2SO_{4(aq)} + BaCl_{2(aq)} \rightarrow BaSO_{4(S)} + 2NaCl_{(aq)}$ என்ற வேதிச்சமன்பாடு பின்வருவனவற்றுள் எவ்வகை வினையைக் குறிக்கிறது?
அ) நடுநிலையாக்கல் வினை ஆ) எரிதல் வினை
இ) வீழ்படிவாதல் வினை ஈ) ஒற்றை இடப்பெயர்ச்சி வினை
28. ஒரு கரைசலின் pH மதிப்பு 3 எனில் அதன் ($OH^-$) ஹைட்ராக்ஸைடு அயனி செறிவு என்ன?
அ) $1x10^{-3}$ M ஆ) 3 M இ) $1x10^{-11}$ M ஈ) 11 M
29. தூளாக்கப்பட்ட $CaCO_3$ கட்டியான $CaCO_3$ விட தீவிரமாக வினைபுரிகிறது காரணம்
அ) அதிக புறப்பரப்பளவு ஆ) அதிக அழுத்தம் இ) அதிக செறிவினால் ஈ) அதிக வெப்பநிலை
30. ஹைட்ரோகுளோரிக் அமிலத்துடன் லித்தியம் உலோகம் வினைபுரியும் போது ---- வாயு வெளியேறுகிறது
அ) நைட்ரஜன் ஆ) ஆக்சிஜன் இ) ஹைட்ரஜன் ஈ) கார்பன்டை ஆக்ஸைடு
31. 25°C வெப்பநிலையில் நீரின் அயனிப் பெருக்கத்தின் மதிப்பு --------
அ) $1.00x10^{-14}$ ஆ) $1.0 x 10^{-20}$ இ) $2.4 x 10^{-14}$ ஈ) $2.5 x 10^{-14}$
32. மனித ரத்தத்தின் பொதுவான pH மதிப்பு
அ) 4.35 - 4.45 ஆ) 6.45 - 6.55 இ) 8.35 - 8.45 ஈ) 7.35 - 7.45
33. சிதைவினைகள் பின்வரும் எவ்வாற்றல்களின் இயல்பை பொருத்து அமைகின்றன?
அ) வெப்பம் ஆ) ஒளி இ) மின் ஈ) இவை அனைத்தும்
34. பின்வரும் எந்த உலோகம் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தில் வைக்கப்படும் போது ஹைட்ரஜனைத் தருகிறது?
அ) ஜிங்க் ஆ) சில்வர் இ) காப்பர் ஈ) தங்கம்
35. பின்வரும் எது வினைவேகத்தை பாதிக்கிறது?
அ) புறப்பரப்பளவு ஆ) அழுத்தம் இ) வெப்பநிலை ஈ) இவை அனைத்தும்
36. காப்பர் சல்பேட்டை நீரில் கரைத்தால், கிடைக்கும் கரைசலின் நிறம்
அ) நிறமற்றது ஆ) நீலம் இ) பச்சை ஈ) பழுப்பு
37. ஒரு திறந்த சங்கிலித் தொடர் கரிம சேர்மத்தின் மூலக்கூறு வாய்ப்பாடு $C_3H_6$ அந்தச் சேர்மத்தின் வகை
அ) அல்கேன் ஆ) அல்கீன் இ) அல்கைன் ஈ) ஆல்கஹால்
38. IUPAC பெயரிடுதலின்படி ஆல்டிஹைடுக்காக சேர்க்கப்படும் இரண்டாம் நிலை முன்னொட்டு---
அ) ஆல் ஆ) ஆயிக் அமிலம் இ) ஏல் ஈ) அல்
39. எரி சாராயம் என்பது ஒரு நீர்மக் கரைசல். இதிலுள்ள எத்தனாலின் சதவீதம்
அ) 95.5% ஆ) 75.5% இ) 55.5% ஈ) 45.5%
40. கீழ்க்கண்டவற்றுள் எது மயக்கமூட்டியாக பயன்படுகிறது
அ) கார்பாக்சிலிக் அமிலம் ஆ) ஈதர் இ) எஸ்டர் ஈ) ஆல்டிஹைடு
41. TFM என்பது சோப்பின் எந்தப் பகுதிப் பொருளைக் குறிக்கிறது
அ) தாது உப்பு ஆ) வைட்டமின் இ) கொழுப்பு அமிலம் ஈ) கார்போஹைட்ரேட்
42. அல்கைனின் பொதுவான மூலக்கூறு வாய்ப்பாடு --------
அ) $C_nH_{2n-2}$ ஆ) $C_nH_{2n+2}$ இ) $C_nH_2$ ஈ) $C_nH_{2n+4}$
43. அடர் சல்பியூரிக் அமிலத்தைக் கொண்டு எத்தனாலை நீர் நீக்கம் செய்யும் பொழுது -------
அ) ஈத்தேன் ஆ) ஈத்தைன் இ) ஈத்தீன் ஈ) புரோப்பேன்
44. வளைய பியூட்டேன் ---- சேர்மத்திற்கு உதாரணம்
அ) வளைய ஆ) வளையமில்லா இ) அரோமேட்டிக் ஈ) அலிசைக்ளிக்
45. பின்வருனவற்றுள் கீட்டோனை கண்டுபிடி
அ) $CH_3COCH_3$ ஆ) $CH_3CHO$ இ) $CH_3COOH$ ஈ) $CH_3COOCH_3$
46. ஈஸ்ட்டில் உள்ள என்சைம்கள்
அ) இன்வர்டேஸ் ஆ) சைமேஸ் இ) அ மற்றும் ஆ ஈ) இவற்றுள் எதுவுமில்லை
47. கடின நீரில் ---- ன் உப்புக்கள் காணப்படுகின்றன
அ) Ca, Mg ஆ) Fe, Ca இ) Cu, Fe ஈ) Cu, Ca
48. எத்தனால் சோடியத்துடன் வினைபடும் போது உருவாகும் விளைபொருள்
அ) சோடியம் அசிட்டேட் ஆ) சோடியம் எத்தனேட் இ) சோடியம் ஈத்தாக்சைடு ஈ) சோடியம் பாஸ்பேட்
49. வினிகரில் உள்ள அமிலம் ---------
அ) மெத்தானயிக் ஆ) எத்தனாயில் இ) புரப்பனாயிக் ஈ) பியூட்டனாயிக்
50. நீளச்சங்கிலி அமைப்பை உடைய கொழுப்பு அமிலங்கள் ---- எனப்படுகிறது
அ) வினிகர் ஆ) டிடர்ஜென்ட் இ) சோப்பு ஈ) ஆ மற்றும் இ
51. உயிர்வழித் தோற்ற விதியின் கூற்றுப்படி
அ) தனி உயிரி வரலாறும் தொகுதி வரலாறும் ஒன்றாகத் திகழும்
ஆ) தனி உயிரி வரலாறு தொகுதி வரலாற்றை மீண்டும் கொண்டுள்ளது
இ) தொகுதி வரலாறு தனி உயிரி வரலாற்றை மீண்டும் கொண்டுள்ளது
ஈ) தொகுதி வரலாறு மற்றும் தனிஉயிரி வரலாறு ஆகியவற்றுக்கு இடையே தொடர்பில்லை
52. "பயன்பாடு மற்றும் பயன்படுத்தாமை" கோட்பாட்டை முன்மொழிந்தவர்
அ) சார்லஸ் டார்வின் ஆ) எர்னஸ்ட் ஹெக்கல் இ) ஜீன் பாப்டிஸ்ட் லாமார்க் ஈ) கிரிகர் மெண்டல்
53. பின்வரும் ஆதாரங்களுள் எது தொல்பொருள் வல்லுநர்களின் ஆய்விற்குப் பயன்படுகிறது?
அ) கருவியல் சான்றுகள் ஆ) தொல்உயிரியல் சான்றுகள்
இ) எச்ச உறுப்பு சான்றுகள் ஈ) மேற்குறிப்பிட்ட அனைத்தும்



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

54. தொல் உயிரிப் படிவங்களின் காலத்தை அறிய உதவும் சிறந்த முறை
அ) ரேடியோ கார்பன்முறை ஆ) யுரேனியம் காரிய முறை
இ) பொட்டாசியம் ஆர்கான் முறை ஈ) அ மற்றும் இ

55. வட்டார இன தாவரவியல் என்னும் சொல்லை முதன் முதலில் அறிமுகப்படுத்தியவர்
அ) கொரானா ஆ) J.W.கார்ஸ் பெர்கர் இ) ரொனால்டு ராஸ் ஈ) ஹியுகோ டி விரிஸ்

56. ஓர் அனுபவமற்ற விவசாயி பயிர் மேம்பாட்டிற்காக எந்த முறையைப் பின்பற்றுவார்?
அ) போட்டித் தேர்வு முறை ஆ) கூட்டுத் தேர்வுமுறை
இ) தூய வரிசைத் தேர்வு முறை ஈ) கலப்பினமாக்கம்

57. பூசா கோமல் என்பது ----- இன் நோய் எதிர்ப்புத்திறன் பெற்ற ரகம் ஆகும்.
அ) கரும்பு ஆ) நெல் இ) தட்டைப்பயிறு ஈ) மக்காச்சோளம்

58. கலப்பினமாக்கம் மற்றும் தேர்வு செய்தல் மூலமாக உருவாக்கப்பட்ட, துரு நோய்க்கு எதிர்ப்புத் தன்மையைப் பெற்ற ஹிம்கிரி என்பது ------ இன் ரகமாகும்
அ) மிளகாய் ஆ) மக்காச்சோளம் இ) கரும்பு ஈ) கோதுமை

59. தன்னுடைய 50 வது பிறந்த நாளைக் கொண்டாடிய, மில்லியன் மக்களின் உயிரைக் காப்பாற்றிய அதிசய அரிசி ---- ஆகும்
அ) IR 8 ஆ) IR 24 இ) அட்டாமிட்டா 2 ஈ) பொன்னி

60. உயிர்த்தொழில்நுட்பத்தால் உருவாக்கப்பட்ட பின்வரும் எப்பொருள் மனிதனுக்கு பயன்படும் பொருள்களை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது?
அ) உயிரினங்களிடமிருந்து பெறப்பட்ட நொதி ஆ) வாழும் உயிரினங்கள்
இ) வைட்டமின்கள் ஈ) (அ) மற்றும் (ஆ)

61. DNAவை வெட்டப் பயன்படும் நொதி ------
அ) கத்திரிக்கோல் ஆ) ரெஸ்ட்ரிக்ஸன் எண்டோநியூக்ளியேஸ்
இ) கத்தி ஈ) RNA நொதிகள்

62. rDNA என்பது ------
அ) ஊர்தி DNA ஆ) வட்ட வடிவ DNA
இ) ஊர்தி DNA மற்றும் விரும்பத்தக்க DNA வின் சேர்க்கை ஈ) சாட்டிலைட் DNA

63. DNAவிரல்ரேகை தொழில்நுட்பம் ----- DNA வரிசையை அடையாளம் காணும் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது
அ) ஒரிழை ஆ) திடீர்மாற்றமுற்ற இ) பல்லுருத்தோற்ற ஈ) மீண்டும் மீண்டும் வரும் தொடர்

64. மாற்றம் செய்யப்பட்ட உள்ளார்ந்த அல்லது அயல் ஜீனைப் பெற்ற உயிரினங்கள் --- என அழைக்கப்படுகின்றன.
அ) அயல்ஜீனைப்பெற்ற உயிரினங்கள் ஆ) மரபுப் பண்பு மாற்றம் செய்யப்பட்டவை
இ) திடீர் மாற்றம் அடைந்தவை ஈ) (அ) மற்றும் (ஆ)

65. ஹெக்சாபிளாய்டி கோதுமையில் (2n=6x=45) ஒற்றை மயம் (n) மற்றும் அடிப்படைத் தொகுதி (x) குரோமோசோம் எண்ணிக்கை முறையே --- ஆகும்.
அ) n=7 and x =21 ஆ) n = 21 and x = 21 இ) n = 7 and x = 7 ஈ) n = 21 and x =7

66. புகையிலைப் பழக்கம், அட்ரினலின் சுரப்பைத் தூண்டுகிறது. இதற்குக் காரணமான காரணி
அ) நிக்கோட்டின் ஆ) டானிக் அமிலம் இ) குர்குமின் ஈ) லெப்டின்

67. உலக புகையிலை எதிர்ப்புத் தினம்
அ) மே 31 ஆ) ஜீன் 6 இ) ஏப்ரல் 22 ஈ) அக்டோபர் 2

68. சாதாரண செல்களை விட புற்றுநோய் செல்கள் கதிர்வீச்சினால் சுலபமாக அழிக்கப்படுகின்றன. ஏனெனில் அவை
அ) வேறுபட்ட உருவ அமைப்பு கொண்டவை ஆ) பிளவுக்கு உட்படுவதில்லை
இ) திடீர்மாற்றமடைந்த செல்கள் ஈ) துரித செல்பிரிதல் தன்மை கொண்டவை

69. நிணநீர் முடிச்சுகள் மற்றும் மண்ணீரலைத் தாக்கும் புற்றுநோய் வகை
அ) கார்சினோமா ஆ) சார்க்கோமா இ) லுயூக்கேமியா ஈ) லிம்போமா

70. அளவுக்கு மிஞ்சிய மதுப்பழக்கத்தினால் உருவாவது
அ) ஞாபக மறதி ஆ) கல்லீரல் சிதைவு இ) மாயத்தோற்றம் ஈ) மூளைசெயல்பாடு குறைதல்

71. இதயக்குழல் இதயநோய் ஏற்படக் காரணம்
அ) ஸ்ட்ரெப்டோகாக்கை பாக்டீரியா தொற்று ஆ) பெரிகார்டியத்தின் வீக்கம்
இ) இதய வால்வுகள் வலுவிழப்பு ஈ) இதயத் தசைகளுக்கு போதிய இரத்தம் செல்லாமை

72. எபிதீலியல் செல்லில் புற்றுநோய் உருவாவதற்கு ----- என்று பெயர்
அ) லுயூக்கேமியா ஆ) சார்க்கோமா இ) கார்சினோமா ஈ) லிம்போமா

73. மெட்டாஸ்டாசிஸ் இதனுடன் தொடர்புடையது
அ) வீரியமிக்க கட்டி(மாலிக்னன்ட்) ஆ) தீங்கற்ற கட்டி
இ) அ மற்றும் ஆ ஈ) மகுடக் கழலை நோய்

74. பாலிபேஜியா என்ற நிலை ------ ல் காணப்படுகிறது
அ) உடற்பருமன் ஆ) டயாபடீஸ் மெல்லிடஸ் இ) டயாபடீஸ் இன்சிபிடஸ் ஈ) எய்ட்ஸ்

75. மது அருந்தியவுடன், உடலில் முதலில் பாதிக்கப்படும் பகுதி
அ) கண்கள் ஆ) செவி உணர்வுப் பகுதி இ) கல்லீரல் ஈ) மைய நரம்பு மண்டலம்

76. கீழுள்ளவற்றுள் எது/எவை புதைபடிவ எரிபொருட்கள் i. தார் ii. கரி iii. பெட்ரோலியம்
அ) i மட்டும் ஆ) i மற்றும் ii இ) ii மற்றும் iii இ) i, ii மற்றும் iii



www.Padasalai.Net

CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

77. கழிவுகளை மேலாண்மை செய்வதற்காக கீழுள்ளவற்றுள் எவற்றினை நீவிர் பயன்படுத்துவீர்?
அ) கழிவுகள் உருவாகும் அளவைக் குறைத்தல் ஆ) கழிவுகளை மறு பயன்பாட்டு முறையில் பயன்படுத்துதல்
இ) கழிவுகளை மறுசுழற்சி செய்தல் ஈ) மேலே உள்ளவை அனைத்தும்

78. வாகனங்கள் வெளியேற்றும் புகையில் உள்ள வாயுக்கள்
i. கார்பன் மோனாக்சைடு ii. சல்பர் டை ஆக்சைடு iii. நைட்ரஜன் ஆக்சைடுகள்
அ) i மற்றும் ii ஆ) i மற்றும் iii இ) ii மற்றும் iii இ) i, ii மற்றும் iii

79. மண்ணரிப்பைத் தடுக்கப் பயன்படுவது
அ) காடுகள் அழிப்பு ஆ) காடுகள்/ மரம் வளர்ப்பு இ) அதிகமாக வளர்த்தல் ஈ) தாவரப் பரப்பு நீக்கம்

80. புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மூலம்
அ) பெட்ரோலியம் ஆ) கரி இ) அணுக்கரு ஆற்றல் ஈ) மரங்கள்

81. கீழுள்ளவற்றுள் மண்ணரிப்பு அதிகமாக காணப்படும் இடம்
அ) மழைபொழிவு இல்லாத இடம் ஆ) குறைவான மழை பொழிவு உள்ள இடம்
இ) அதிகமான மழைப்பொழிவு உள்ள இடம் ஈ) இவற்றில் எதுவுமில்லை

82. கீழுள்ளவற்றுள் தீர்ந்து போகாத வளம்/வளங்கள்
அ) காற்றாற்றல் ஆ) மண்வளம் இ) வன உயிரி ஈ) மேலே உள்ள அனைத்தும்

83. கிராமங்களில் கிடைக்கும் பொதுவான ஆற்றல் மூலம் / மூலங்கள்
அ) மின்சாரம் ஆ) கரி
இ) உயிரிவாயு ஈ) மரக்கட்டைகள் மற்றும் விலங்குகளின் கழிவு

84. பசுமை இல்ல விளைவு என குறிப்பிடப்படுவது
அ) பூமி குளிர்தல் ஆ) புற ஊதாக் கதிர்கள் வெளி செல்லாமல் இருத்தல்
இ) தாவரங்கள் பயிர் செய்தல் ஈ) பூமி வெப்பமாதல்

85. மிக மலிவான வழக்கமான வர்த்தக ரிதியிலான தீர்ந்து போகாத ஆற்றல் மூலம்
அ) நீர் ஆற்றல் ஆ) சூரிய ஆற்றல் இ) காற்றாற்றல் ஈ) வெப்ப ஆற்றல்

86. புவி வெப்பமாதலின் காரணமாக ஏற்படக்கூடிய விளைவு
அ) கடல்மட்டம் உயர்தல் ஆ) பனிப்பாறைகள் உருகுதல்
இ) தீவுக்கூட்டங்கள் மூழ்குதல் ஈ) மேலே கூறிய அனைத்தும்

87. கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளில் காற்றாற்றல் குறித்த தவறான கூற்று எது?
அ) காற்றாற்றல் ஒரு புதுப்பிக்கத்தக்க ஆற்றல்
ஆ) காற்றாலையின் இறக்கைகள் மின்மோட்டார் மூலம் இயக்கப்படுகின்றன.
இ) காற்றாற்றல் மாசு ஏற்படுத்தாமல் உற்பத்தி செய்யப்படுகிறது
ஈ) காற்றாலைப் பயன்படுத்துவதன் மூலம் புதைபடிவ எரிபொருட்கள் பயன்பாட்டினைக் குறைக்கலாம்

88. அசைவூட்டும் காணொளிகளை உருவாக்க பயன்படும் மென்பொருள் எது?
அ) Paint ஆ) PDF இ) MS Word ஈ) Scratch

89. பல கோப்புகள் சேமிக்கப்படும் இடம்
அ) கோப்புத் தொகுப்பு ஆ) பெட்டி இ) Paint ஈ) ஸ்கேனர்

90. நிரல் (Script) உருவாக்கப் பயன்படுவது எது?
அ) Script area ஆ) Block palette இ) Stage ஈ) Sprite

91. நிரலாக்கத்தைத் தொகுக்கப் பயன்படுவது எது?
அ) Ink Scape ஆ) Script editor இ) Stage ஈ) Sprite

92. பிளாக்குகளை (Block) உருவாக்க பயன்படுவது எது?
அ) Block Palette ஆ) Block Menu இ) Script area ஈ) Sprite

93. உயிர் பிறப்புக் கோட்பாடு ------ அவர்களால் உருவாக்கப்பட்டது
அ) ஹால்டேன் ஆ) பாஸ்டர் இ) டார்வின் ஈ) லாமார்க்

94. --- என்பவர் தொல்லுயிரியல் துறையின் தந்தை என அழைக்கப்படுகிறார்
அ) பாஸ்டர் ஆ) பீர்பால் சகனி இ) ஹெக்கல் ஈ) லியோனார்டோ டாவின்சி

95. பாறைகளில் புதை உயிர்ப் படிவங்கள் உருவாவதை --- என்கிறோம்
அ) கால்சியமாதல் ஆ) படிகமாக்கல் இ) கல்லாதல் ஈ) படிவமாதல்

96. சர்வதேச நெல் ஆராய்ச்சிய நிலையம் ---- நாட்டில் உள்ளது
அ) நேபாளம் ஆ) மெக்ஸிகோ இ) பிலிப்பைன்ஸ் ஈ) சீனா

97. ------- என்ற இரத்த உறைதல் நோயினை உயிர்த் தொழில் நுட்பவியல் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட இரத்த உறைதல் காரணியைக் கொண்டு கட்டுப்படுத்தலாம்.
அ) ஹீமோஃபிலியா ஆ) நீர்ச்சம நிலை இ) பெருமூளை வாதம் ஈ) எய்ட்ஸ்

98. இந்திய பசுமைப்புரட்சியின் தந்தை என அழைக்கப்படுபவர் ------- ஆவார்
அ) டாக்டர் மா.சா.சுவாமிநாதன் ஆ) டாக்டர் நார்மன்
இ) அலக் ஜெஃப்ரெ ஈ) டாக்டர் அயான் வில்மட்

99. உலக எய்ட்ஸ் தினம் அனுசரிக்கப்படும் நாள் -------- ஆகும்.
அ) டிசம்பர் 1 ம் நாள் ஆ) டிசம்பர் 15 ம் நாள் இ) நவம்பர் 24 ம் நாள் ஈ) டிசம்பர் 5 ம் நாள்

100. அதிகப்படியான குளுக்கோஸ் சிறுநீரில் வெளியேறுவதன் காரணமாக ஏற்படும் அதிகப்படியான பசி --- ஆகும்.
அ) பாலிபேஜியா ஆ) பாலிடிப்சியா இ) பாலியூரியா ஈ) கிளைகோசூரியா



CamScanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com